**உயர் கல்வி(இ1)த்துறை**

**கடித (நிலை) எண்.154, நாள். 23.6.2011**

அனுப்புநர்
முனைவர்.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: சுயநிதிக் கல்லூரிகள் – நிதியுதவி பெறாத தனியார் ஆடவர் / மகளிர்/ இருபாலர் பயிலும் கல்லூரியாக மாற்றம் செய்ய அரசின் அனுமதி வேண்டுகிற கல்வி முகமைகளின் விண்ணப்பங்களின் மீதான ஆய்வறிக்கையை அரசுக்கு அனுப்ப வேண்டுவது – தொடர்பாக.

பார்வை. அரசு கடிதம் (நிலை) எண்.152, உயர் கல்வித் (இ1) துறை, நாள். 23.6.2011.

******

பார்வையில் காணும் அரசு கடிதத்தில் இனிவரும் காலங்களில் அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அரசின் அனுமதி வேண்டி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கையுடன் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுப்பி வைக்கப்படும் கருத்துருக்களை பரிசீலிக்க ஏதுவாக கல்வி முகமைகளிடமிருந்து தங்களால் பெறப்படும் விண்ணப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள, நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர ஊரமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா ? மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) இவற்றிற்கான மண்டலம் என்ன ? மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதா மற்றும் கல்லூரிகள் அவ்விடத்தில் அமைவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது ஆய்வு செய்து தங்களின் அறிக்கையினை அரசுக்கு நேரடியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. இதனிடையே, அரசின் நிதியுதவி பெறாமல் அரசின் அனுமதி பெற்று தனியாரால் துவங்கப்பெற்று நடைபெற்று வரும் ஆடவர் / மகளிர் / இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை ஒரு சில காரணங்களுக்காக மகளிர் கல்லூரியாகவோ, ஆடவர் கல்லூரியாகவோ அல்லது இருபாலர் பயிலும் கல்லூரியாகவோ மாற்றம் செய்ய கல்லூரி முகமைகள் தீர்மானம் நிறைவேற்றி விண்ணப்பிப்பதின் அடிப்படையில், சார்ந்த மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநரோ அல்லது கல்லூரிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்படுகின்றன. இவற்றினை ஆராய்ந்து அரசு அனுமதி வழங்கி வருகிறது.

3. இந்நிலையில், இனி வரும் காலங்களில் ஏற்கனவே துவங்கப் பெற்று நடைபெற்று வரும் கல்லூரிகளை ஆடவர் மட்டும் (அல்லது) மகளிர் மட்டும் (அல்லது) இருபாலர் பயிலும் கல்லூரியாகவோ மாற்றம் செய்ய அரசின் அனுமதி வேண்டி பெறப்படும் கருத்துருக்களைப் பரிசீலிக்க ஏதுவாக கல்லூரி முகமைகள் அளிக்கும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே உணவறை, போதுமான ஓய்வறைகள் மற்றும் கழிவறைகள் போன்ற பொது வசதிகள் உள்ளனவா என்பனவற்றின் மீது ஆய்வு செய்து அவ்வாய்வறிக்கையினை அரசுக்கு நேரடியாக அனுப்புமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

4. மேலும், இவ்வாறு கல்லூரிகளை மாற்றம் செய்யும்போது கூடுதலாக கட்டிடங்களோ / அறைகளோ உருவாக்கப்பட்டுள்ளதாக அறியப்படின், அரசு கடிதம் (நிலை) எண்.152, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.23.6.2011–இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் பின்பற்றபட்டுள்ளனவா என்பதையும் ஆராய்ந்து ஆய்வறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்:
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை –6.
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/ உதிரி.